Rice seized near Kodambakkam

* 473 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether large stocks of rice bags were seized by the Food Cell near Kodambakam in Madras City about the 13th April 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு நெல் அரிசி விற்பனையாளர் (உரிமம் வழங்கல், முறைப்படுத்துதல், இருப்புகளை விற்பனை செய்தல்) ஆணையின்கீழ் உரிமம் பெறாமல், அரிசி விற்பனை செய்து கொண்டிருந்த 34 பேர்களிடமிருந்து 1,495 மூட்டை அரிசி கைப்பற்றப் பட்டது. அவர்கள் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையத்தில் விடுவிக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட அரிசி இருப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு அவர்களுக்கு அரசு கொள்முதல் விதங்களில் தொகை கொடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது கைவிடப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இப்படி உரிமம் இல்லாது விற்பனை செய்தவர்கள் மீது எந்த சட்டத்தின்படி ப்ராசிக்யூஷன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? அவர்கள் தண்டிக்கப்பட்டார்களா? விடுவிக்கப்பட்டார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 34 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்கள் என்பதாலும், இதுபோல் இனிமேல் வியாபாரம் உரிமம் பெறாமல் செய்யவில்லை என அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எழுதிக்கொடுத்த காரணத்தினால், அவர்களிடம் இருந்து கைப் பற்றப்பட்ட அரிசிக்குச் சட்டப்படியான தொகை கொடுக்கப் பட்டு, அவர்கள் மன்னித்துவிடப்பட்டார்கள்.

விறகு விலைக் குறைப்பு

* 474 வின—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்பொழுது நமது மாநிலத்தில் விறகின் (**Fire-wood**) விலை மிக்க உச்சக் கட்டத்தை அடைந்துள்ளதென்பது உண்மையா?

1973 நவம்பர் 28]

(இ) ஆம் எனில், விலையைக் குறைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்தக் கேள்வியை நான் கேட்டே ஓராண்டாகிறது. அன்றைக்கு இருந்த விலையைவிட இன்றைக்கு 1½ மடங்கு ஏறியிருக்கிறது. நெய்வேலியில் லீகோ கரி உற்பத்தியையும் நிறுத்திவிட்டதாகத் தெரிகிறது. ஆகவே நாள்தோறும் ஏறிக்கொண்டிருக்கிற விறகின் விலையைத் தடுத்து நிறுத்த வேறு மார்க்கங்கள் எதையாவது கண்டுபிடிக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: சென்னையில் விறகுக் கடைகளில் விறகு விற்பனையே இல்லை என்று சொல்லு கிறார்கள். 1971-இல் சென்னை சவுக்கு ரூ. 21 ஆக இருந்தது, 1973-இல் ரூ. 18 ஆகத்தான் இருக்கிறது. அதேபோல கடலூர் சவுக்கு 1971-இல் ரூ. 14 ஆக இருந்தது, இப்போது 13 ரூபாயாக இருக் கிறது. இப்படி விறகு விலை குறைந்திருக்கிறது என்று சொல்ல லாம். இந்த அளவுக்கு சென்னை நகரில் விறகு வியாபாரம் குறைந் திருக்கிறது.

தொழிலாளர் இடர் துயர்தணிப்பு நிதி

* 475 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு Industrial Accidents Distress Relief Fund என்று ஏற்படுத்தியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அந்த நிதி எந்தெந்த இனங்களுக்கு செலவு செய்யப்படுகிறது?

(உ) 1972-73 நிதியாண்டில் எத்தனை பேர்களுக்கு உதவி யளிக்கப்பட்டது?